விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை (18.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 89

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கொழும்பு ஆட்கடத்தல் கோத்தபாயவுக்கு தொடர்பு

### ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் இடம்பெறும் ஆட் கடத்தல்களுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஐக்கிய தேசியக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகள் 83 பேரின் நிலைகுறித்து அகதிகளுக்கான ஐ.நா.அமைப்பு கவலை

(ஜெனீவா)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலிருந்து பசுபிக் தீவான நவ்று தீவுக்கு கடத்தப்பட்ட இலங்கை அகதிகள் 83 பேரின் நிலை குறித்து அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் கவலை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசின் குடியேற்றக் கொள்கைப்படி எடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் இந்த அகதிகள் நவ்று தீவில் நீண்ட காலம் தங்கியிருக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கவலை வெளியிட்டிருக்கும் அகதிகளுக்கான ஐ.நா. ஆணையாளர், ஏற்கனவே நவ்று தீவுக்கு அனுப்பப்பட்ட அகதிகளில் பலர் ஐந்தாண்டுகளுக்கும் அதிக காலம் அங்கு தங்கியிருக்கின்றனர் என்பதை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கிறிஸ்மஸ் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கப் படையை அழைக்க அரசு திட்டம்!


### முன்னேற்பாட்டு நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை நடத்துவதற்கு அமெரிக்கப் படைகளை அழைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.**

விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்தை குறைத்து மதிப்பிட வேண்டாமென அமெரிக்கா இலங்கை அரசுக்குக் கூறியிருந்ததும், அதனைத் தொடர்ந்து இலங்கையின் கடல், விமானத் தளங்கள் அனைத்தையும் அமெரிக்கப் படைகள் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கும்இலங்கை–அமெரிக்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் தெரிந்ததே.

இவை அனைத்தும் அமெரிக்கப் படைகளை இலங்கைக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)



கடத்தல் மற்றும் கப்பம் பெறல் சம்பவங்களைக் கண்டித்து கொழும்பு-12இல் உள்ள இரும்புக் கடை உரிமையாளர்கள் நேற்று முன்தினம் கடைகளை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## நாகர்கோவிலில் படையினர் நகர்வு முயற்சி தமிழீழ விடுதலைப்புலிகளினால் முறியடிப்பு


(கிளிநொச்சி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நேற்று படையினர் மேற்கொண்ட முன் நகர்வு முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப்புலிகளின் முன்னரண்களை நோக்கி நேற்று அதிகாலை 5.50 மணியளவில் படையினர் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியே விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாக புலிகளின் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் முறியடிப்பின் போது படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் படையினரிடமிருந்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர் சூரியாராட்சி குற்றப் புலனாய்வுத்துறையால் கைது



(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் அதிருப்திக் குழுவில் ஒருவரும் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சருமான சிறிபதி சூரியாராட்சி நேற்று மாலை 3 மணியளவில் குற்றப்புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சூரியாராட்சியை கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

பொதுச் சொத்தை துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே நீதிமன்ற நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளார்.

கடுவெல நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் நேற்றுக் காலை இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்குச்சென்ற சூரியாராட்சியை விசாரித்த பொலிஸார் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ம.உ.ஆ.குழுவில் இளைஞன் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

உயிர் அச்சுறுத்தல் காரணமாக உடுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் வடக்கில் ஒருவர் சுட்டுக் கொலை

மிருசுவில் வடக்கில் நேற்றுக் காலை 11 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் சி.மகிந்ததேவன் (வயது–28) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ந–5)

## மக்கள் எதிர்பார்க்கும் அரசு வெகுவிரைவில் அமையும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்கள் எதிர்பார்ப்பதை நிறைவேற்றும் அரசாங்கம் ஒன்றை வெகுவிரைவில் அமைக்கவிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். நேற்று ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்ற கட்சியின் சம்மேளனத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ‘திலீபன்’ வைத்தியசாலையை படையினர் கைப்பற்றியுள்ளனராம்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

தொப்பிக்கலவுக்குத் தெற்காகப் படையினர் தொடர்ந்தும் படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் உன்னிச்சைப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகள் நடாத்தி வந்த ‘திலீபன்’ ஞாபகார்த்த வைத்தியசாலையைப்படையினர் கைப்பற்றியுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில் பாடசாலை ஒன்றையும் படையினர் கைப்பற்றியுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ந–3)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

ICC Cricket World Cup

## இங்கிலாந்தை வீழ்த்தியது நியூசிலாந்து அணி

இங்கிலாந்து அணியை ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி உலகக்கிண்ணத் தொடரை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் ஒன்பதாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் சென்.லூசியாவில் நடைபெற்ற ஆறாவது போட்டியில் இங்கிலாந்து-நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் நியூசிலாந்து பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சில் 52 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் கொலின் வூட் ,பீற்றர்சன் ஆகியோரின் இணைப்பாட்டத்தால் மீண்டது. இருவரும் 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று அணியை 35 ஓவர்களில் 133 ஓட்டங்களுக்கு உயர்த்திச் சென்றபோது கொலின் வூட் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்த ஓவரில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய பீற்றர்சன் 60 ஓட்டங்களுடனும் அதிரடி வீரர் பிளின்டொப் ஓட்டம் எதையும் பெறாத நிலையில் நியூசிலாந்தின் வீரர் பொன்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து சென்றார்.

தொடர்ந்து களமிறங்கிய டெயிலிமோரும் மூன்று ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து செல்ல இங்கிலாந்து அணி 38.2 ஓவர்களில் 138 ஓட்டங்களைப் பெற்று நிலை குலைந்தது. எனினும் விக்கெட் காப்பாளர் நிக்சன் 40 ஓட்டங்களையும் பிளிங்கற் 29 ஓட்டங்களையும் இறுதிவரை இணை பிரியாமல் பெற்றுக்கொள்ள இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பந்து வீச்சில் நியூசிலாந்து அணிக்குச் சார்பாக பிறங்லின் பொன்ட்,ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். தொடர்ந்து 50 ஓவர்களில் 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 19 ஓட்டங்களிற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் ஸ்ரைரிஸ் மற்றும் ஜேக்கப்ஓரம் ஆகியோர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியதால் நியூசிலாந்து அணி 41 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 210 ஓட்டங்கைப் பெற்று ஆறு விக்கெட்டுக்களால் சிறப்பான வெற்றியை பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் ஸ்ரைரிஸ் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓரம் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணிசார்பாக அன்ரர்ஸன் இரண்டு விக்கெட்டுக்களையும் பிளங்கற், பைனேசர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஆட்டமிழக்காமல் 87 ஓட்டங்களையும், பந்து வீச்சில் இரண்டு விக்கெட்டுக்களையும் களத்தடுப்பில் ஒரு பிடியையும் பெற்று அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்ற நியூசிலாந்து அணியின் ஸ்ரைரிஸ் தெரிவானார். (ந-5)

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

மழலைச் செல்வங்களுக்கு மக்கள் வங்கியின் அன்பளிப்பு

2007-ம் ஆண்டு பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் மக்கள் மனமறிந்த வங்கியான மக்கள் வங்கி ரூபா 100/ ஐ ஆரம்ப வைப்பாகக் கொண்ட "இசுறுஉதான" சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து அன்பளிப்பாக வழங்குவதற்கு முன்வந்துள்ளமையால், 2007-ம் ஆண்டு ஜனவரி 01ந் திகதியிலிருந்து மழலைச் செல்வங்களைப் பெற்றெடுத்த /பெற்றெடுக்கும் பெற்றோர்களே! உங்களுக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக்கிளைக்குக் குழந்தையின் பிறப்புச் சான்றிதழுடன் சென்று இந்த அன்பளிப்பான "இசுறுஉதான" சேமிப்புப் புத்தகத்தினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அனுசரணை

## இன்றைய போட்டிகள்

அவுஸ்திரேலியா எதிர் நெதர்லாந்து

இங்கிலாந்து எதிர் கனடா

## நெதர்லாந்தை வென்றது தென்னாபிரிக்க அணி

நெதர்லாந்துடனான போட்டியில் கிப்ஸின் உலகசாதனையுடன் தென்னாபி ரிக்க அணி 221 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் 7ஆவது போட்டியாக நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் தென்னா பிரிக்க மற்றும் நெதர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டி 40 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணியின் தலைவர் வான்றூஸ்ற் தென்னாபிரிக்க அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி கிப்ஸின் அதிரடியான ஆட்டத்தால் 40 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணிசார்பாக கலீஸ் ஆட்டமிழக்காமல் 128 ஓட்டங்களையும் கிப்ஸ் அதிரடியாக 72 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் 75 ஓட்டங்களையும் மற்றும் அணித் தலைவர் ஸ்மித் 67 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நெதர்லாந்து அணிசார்பாக ஸ்ரெல்லிங், போறன், வான்றூஸ்ற் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து 40 ஓவர்களில் 354 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணி 40 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று 221 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் டென் ரோஸ்ஸாட் 57 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக கேம்ப் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை இப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் கேர்சல் கிப்ஸ் நெதர்லாந்து அணியின் வான்பஞ் வீசிய ஓவரில் ஆறு பந்துகளிலும் எல்லைக் கோட்டுக்கு வெளியே ஆறு ஓட்டங்களாக விரட்டி அடித்து 36 ஓட்டங்களைப் பெற்று கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்தார். இவரே இப் போட்டியின் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். (ந-5)

## மட்டு.அகதிகளுக்கு உதவ கொழும்பில் நிவாரணம் சேகரிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் இடம் பெயர்ந்திருக்கும் மக்களுக்கு உதவவென கொழும்பு வர்த்தகர்கள் மத்தியில் நிவாரணப் பொருட்கள் நேற்று சேகரிக்கப்பட்டன.

மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ் நிவாரணப் பொருட்சேகரிப்பில் ஈடுபட்டனர்.

சேகரிக்கப்பட்ட பொருட்கள் இன்று மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இதேவேளை மட்டக்களப்பில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு உதவ விரும்புவோர் மேலக மக்கள் முன்னணியின் தலைவர் அல்லது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ந-3)

## யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்தி மனித அவலங்கள் நிறுத்தப்பட வேண்டும்

### மாணவர் பேரவை வேண்டுகோள்

இலங்கைத்தீவில் இனமுரண்பாட்டை தீர்த்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக 2002-ம் ஆண்டு அரசு-தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் சர்வதேச முன்னிலையில் செய்து கொள்ளப்பட்ட போதும் ஐந்து வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் தமிழர் பிரதேசங்கள் மீது பாரிய மனித அவலங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை குற்றஞ்சாட்டியுள்ளது. சர்வதேச முன்னிலையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கூட மதிக்காமல் அரசு செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக தமிழர் தாயகத்தின் கிழக்கு மாவட்டங்களான திருகோணமலை,மட் டக்களப்பு , அம்பாறை ஆகிய பகுதிகளில் இடம் பெறும் மிகமோசமான இராணுவ தாக்குதல்கள் காரணமாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்க்கப்பட்டுள்ளனர். இருப்பிடங்களின்றியும் ஒரு நேர உணவுக்குக்கூட வழியில்லாமல் அல்லுறுகின்றனர்.

வடக்கே யாழ்.குடாநாட்டிற்கான தரை வழிப்பாதையை மூடி யாழ். குடாநாட்டை திறந்த வெளிச் சிறைச்சாலையாக்கி ஆறு லட் சத்திற்கு மேற்பட்ட மக்கள் செய்வதறியாது சிக்கித் தவிக்கின்றனர். நாளும் பொழுதும் மக்கள் கடத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும் காணாமல் போவதும் வழமையான நிகழ்வுகளாகிவிட்டன.

சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகளை கூடமதிக்காமல் மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கின்றோம். தமிழ் மக்கள் குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களையும் பாடசாலைகளுக்கு அண்மையிலிருந்தும் மக்கள் குடியிருப்புகளிலிருந்தும் மேற்கொள்ளப்படும் பீரங்கிதாக்குதல்களையும் உடன் நிறுத்துமாறும் வேண்டுகின்றோம். (ஏ)

உணவகத் திறப்பு விழா அழைப்பிதழ்

வட்டுக்கோட்டை-அரசினர் கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் நோயாளர்களின் நன்மை கருதி திறந்து வைக்கும்

"வைத்தியசாலை உணவகம்"

தலைமை:- திரு.கா.நடராசா
(தலைவர்,வட்டுக்கோட்டை அ.கி.வை.அ.சங்கம்)
இடம்:- வைத்தியசாலை முன்பாகவுள்ள கட்டடம்
காலம்:- 19.03.2007 திங்கட்கிழமை
நேரம்:- முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரையுள்ள சுபவேளையில்

பிரதம விருந்தினர்

வைத்தியகலாநிதி திருமதி கிருபா செல்வராசா
(உணவகத்தை திறந்து வைப்பார்)
(பொறுப்பு வைத்திய அதிகாரி,வ.அ.கி.வைத்தியசாலை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நல்வரவை நாடும்

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

சி.சச்சிதானந்தம்
(வட்டுக்கோட்டை-அ.கி.வை.அ.சங்க உணவக முகாமையாளரும் வட்டுக்கோட்டை சச்சியா இரும்பக உரிமையாளரும்)

(C-650)

## அமெ.இராஜாங்க செயலருடன் வெளிவிவகார அமைச்சர் சந்திப்பு

வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலிசா றைஸை நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இச் சந்திப்பில் இலங்கையில் நிலவும் மனித உரிமைகளின் நிலைமைகள் தொடர்பாகவும் அண்மையில் இராணுவத்தால் கிழக்கு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கை இனநெருக்கடிக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவிசெய்யும் எனவும் றைஸ் தெரிவித்துள்ளார். (ந-5)

## குழந்தைகளை பொறுப்பேற்க விண்ணப்பிக்கலாம்

கைதடி அரச சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள 2 ஆண் குழந்தை 2பெண்குழந்தைகள் தற்போது சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றின் பாதுகாப்பில் எடுக்கப்பட்டு அவர்களை தகுதியான பெற்றோருக்கு வழங்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி குழந்தைகளை தத்தெடுக்க விரும்பும் தம்பதியர் தமது எழுத்திலான விண்ணப்பத்தை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக தமக்குக் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது கடிதம் மூலமோ சேர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கோரியுள்ளார்.

மேலும் விண்ணப்பங்களில் தம்மிடம் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் அவர்கள் குறிப்பிடவேண்டுமெனவும் பதிவாளர் கேட்டுள்ளார்.

விண்ணப்பிப்பவர்களில் தகுதியானவர்கள் அழைக்கப்பட்டு தேர்வுக்குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் குழந்தைகள் வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ISUZU 250,252, 325 ரக வான்களில் இரண்டு விற்பனைக்குண்டு. கே.கே.எஸ்.வீதி கோண்டாவிலில் உள்ள (K.R.S Foods Product) தொழிலகத்தில் ஞாயிற்றுக்கிழமையும் மற்றும் நாட்களில் பி.ப.3 மணிக்குப் பின்பும் வாகனங்களைப் பார்வையிடலாம் தொடர்புகளுக்கு:- K.R. சிவலோகநாதன் அன் கோ. இல.96(6) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P.222 3347 (824)

விற்பனைக்கு

புத்தம் புதிய போட்டோ கொப்பி மெசின் (ஸ்கானர், பிறின்ரர், பக்ஸ் இணைந்தது) எக்ஸ்ரா இரண்டு ரோணர்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- ஐங்கரன் ஸ்ரோர்ஸ் (பொருளியற் கல்லூரி முன்பாக), 194,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P- 222 8368. (820)

மணமகள் தேவை

கனடாவில் உள்ள யாழ். இந்து உயர் குலம், வயது 26, பூசம் 2ஆம் பாதம் செவ்வாய் 12 இலும் 28 3/4 பாவக்கிரகம். உயரம் 5 அடி 10 அங்குலம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை தொடர்பு:

T.P-222 3772 (826)

சர்வம் பிரமமயம்

சிவகுருநாத குருபீடம்

மகாதேவாஆச்சிரமம்

வேதாந்தமடம்

இம்மடத்தின் இரண்டாவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் சார்ஜன் சுவாமிகள் அவர்களின் வருடாந்த குருபூஜை இன்று (பங்குனி மாதம் சதயநட்சத்திரம்) வேதாந்த மடத்தில் நடைபெறும். (C-649)

# தரிசனம்

சரிநிகர்

# சமாதானம் தொடர்பில் அரசாங்கம் செல்லும் பாதை

### நம்புவதற்கு எந்த ஆதாரமும் இல்லை

எஸ்.பாலகிருஷ்ணன்
(சமாதான செயற்பாட்டாளர்)

சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளையும், பேரினவாத சக்திகளையும் அணிதிரட்டி வலுப்பெறச் செய்ததன் மூலம் அவர்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக்



கொண்டதொரு தேர்தல் வெற்றியை மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் அடைந்தார். இவ்வகையான அரசியல் நிலைமைகள் தமிழ் மக்கள் மீதான அரசின் ஆதிக்கத்தை வலுப்படுத்த உதவும் எனக் கருதப்பட்டது.

சமாதான நடைமுறையின் ஒரு முன்னேற்றமாகக் காணப்பட்ட சமஷ்டிக் கட்டமைப்பையும், உள்ளக சுயநிர்ணய உரிமையையும் அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்விற்காக முயல்வது என்னும் ஒஸ்லோ இணக்கப்பாட்டை புறக்கணித்து விட்டு, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு கொண்ட தீர்வை அடையப் போவதாக வாக்குறுதியளித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவ்வகையான தீர்வை அடையும் மார்க்கம் என்ன என்பது பற்றிய விளக்கமோ அல்லது அவ்வகையான முயற்சியின் விளைவு எவ்வாறு அமையும் என்பது பற்றியோ தெரியாமலிருக்க முடியாது.

ஒற்றையாட்சி எனபது பெரும்பான்மையின் ஆதிக்கம் கொண்ட ஆட்சி. எனவே இதைத் தக்கவைத்துக் கொள்வது பேச்சுவார்த்தையின் மூலம் சாத்தியப்படப் போவதில்லை. எனவே ஒற்றையாட்சிக்கெதிரான சவால்களை இராணுவ ரீதியில் முறியடிக்க சமாதானத்துக்கான யுத்தம் அவருக்கு தேவைப்படுகின்றது என்பது சுலபமாக விளங்கிக் கொள்ளக் கூடிய விடயமாகும். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் இராணுவத்திற்கெதிரான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டமையானது இருந்த சமாதானத்திற்கான வாய்ப்பையும் இழந்து யுத்த முனைப்புகளை அரசு ஏற்படுத்தியுள்ளது.

சர்வகட்சி மாநாட்டின் அரசியல் தீர்வு தொடர்பாக தானே நியமித்த அறிஞர் குழுவின் பெரும்பான்மையினர் அறிக்கை தனது அரசின் அறிக்கை அல்ல என்று நிராகரிக்கின்ற ஜனாதிபதியின் மன நிலையானது எவ்விதமாக சமஷ்டிக் கோட்பாடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள தமக்கிருக்கும் விருப்பமின்மையையே காட்டுகின்றது.

எனவே தற்போது போர்க்களத்தில் வெற்றிவாகை சூடுவதாக மார்தட்டிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த யுத்தத்திலிருந்தும் பேரினவாத கருத்தியல் நிலைப்பாட்டிலிருந்தும் விடுபட்டு ஒரு பல்லினப் பாங்கான தேசத்தைக் கட்டியெழுப்ப முன்வருவார் என்பதை நம்புவதற்கு இதுவரை எவ்வித ஆதாரமும் இல்லை.

### சர்வகட்சி மாநாட்டின் வேகம் போதாது

ரி.ஆ.அன்வர் அலி
(ஆசிரியர் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி)

யுத்த நிறுத்தம் மூலம் ஏற்பட்ட அமைதி இன்று இல்லாமல் போய்விட்டது. ஜனாதிபதி தேர்தலின் பின் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு வெகுவாக குறைவடைந்து வந்துள்ளது. இதனை சீர் செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. ரணில் அரசாங்கம் சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டால் கூட தனது சாதகமான அணுகுமுறையால் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான இடைவெளியை குறைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டது. ஆனால் தற்போது அத்தகைய நிலை காணப்படவில்லை. இதனால் சமாதானத்துக்கான சாத்தியம் குறைவடைந்துள்ளது. யுத்த முனைப்பு அதிகரித்துள்ளது. அரசாங்கத்தின் சமாதானம் தொடர்பான அணுகுமுறை இல்லாமல் போய்விட்டது.

வடகிழக்கு பிரிப்பு மாவிலாறு நீர்ப் பிரச்சினை என்பன இன்று கிழக்கிலே கொரில்லா போரினை தொடர்வதற்கு வழிவகுத்து விட்டது. கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட தீர்வுயோசனைகள் சட்டவலு அற்றவையாக போயுள்ளன. இதற்குக் காரணம் பல கட்சி ஆட்சி முறை ஆகும். விகிதாசார தேர்தல் பல கட்சிகளையும் பாராளுமன்றத்துக்குள் உள்வாங்கியுள்ளது. தீர்வு யோசனைகள் சட்ட அங்கீகாரம் பெறுவதை இது தடுப்பதாக உள்ளது. ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமய கட்சிகளின் நடவடிக்கைகளை உதாரணமாகக் கொள்ளமுடியும்.

இந்தக் கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் பாராளுமன்றத்தில் அங் கீகாரம் பெறுவதை விரும்புவதாக இல்லை. பேச்சுவார்த்தையில் முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு என்பது சாத்தியம் அற்றதாகவே உள்ளது.

பாராளுமன்றத்தில் இந்த விடயம் பேசப்படும் போது பெரும்பான்மைக் கட்சிகள் தனித்தரப்பு விடயத்துக்கு ஆதரவு வழங்கினாலும் நடைமுறையில் இது சாத்தியமற்றதாகவே இருந்துள்ளது.

அரசு, முஸ்லிம்களுக்கான தனித்தரப்பை ஆதரித்தாலும் பேச்சுவார்த்தைக் களத்தில் இதனை நடைமுறைப்படுத்த தவறியுள்ளது. இது முஸ்லிம் கட்சிகள் மீதான நம்பிக்கையை மக்கள் மத்தியில் இல்லாமல் செய்து விடும். அரசின் தீவிரத் தன்மை இனப்பிரச்சினை விடயத்தில் காலங் கடத்தும் நடவடிக்கையாக கருதப்படுகிறது. தீர்வுத் திட்டத்தை முன்வைக்க அரசு கஷ்டப்படுகிறது. இதற்கு ஜே.வி.பி ., ஹெல உறுமய போன்ற கட்சிகளின் நடவடிக்கைகள் காரணமாக உள்ளன. சந்திரிகா அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை மீளவும் கொண்டு வந்தால் அரசுக்கு எதிர்ப்புக்கள் குறையலாம்.

ஏனெனில் இன்று அரசில் இருப்பவர்கள் பலர் அன்று சந்திரிகா அரசிலும் அங்கத்துவம் வகித்தவர்கள். ஆனாலும் இதற்கான பின்புலம் கூட பாதகமாகவே உள்ளது. தீர்வுக்கான விடயம் பின்தள்ளப்பட்டுள்ளது.

என்றைக்கும் இல்லாத அளவு சர்வதேச அழுத்தம் இன்று பிரயோகிக்கப்படுகிறது. இவை சர்வதேச பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகிறது. சர்வகட்சி மாநாட்டின் வேகம் போதாது. ஜே. வி. பி. மாநாட்டில் இருந்து விலகியது பாதகமான தன்மையாக உள்ளது.

அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை அரசின் நடவடிக்கைகளால் இல்லாமல் போய் விட்டது. இது அரசின் இனப் பிரச்சினை தீர்வு விடயத்தை பாதகமாக்கி விட்டது.

வட -கிழக்கு பிரிப்பை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவில்லை. வட-கிழக்கு இணைந்த தீர்வுத்திட்டம் என்பது அரசினால் எந்தளவுக்கு சாத்தியம் என்பது வினாவுக்குரியதே. பேச்சுவார்த்தைக்கான தூரம் கூடிப்போய் உள்ளது. அரசு - புலிகள் பேச்சுவார்த்தைககான களம் சீர்குலைந்துள்ளது.

### கேள்விக்குறியாக உள்ள அரசின் தீர்வுத் திட்டம்

சி.அ.ஜோதிலிங்கம்
(அரசியல் ஆய்வாளர்)

சமாதானத்துக்கான அடிப்படை விடயங்களாக யுத்தநிறுத்த உடன்படிக்கை வட - கிழக்கு இணைப்பு என்ற இரண்டு விடயங்களை கருத்தில் எடுக்க முடியும். இந்த அரசாங்கம் இரண்டையும் இல்லாமல் ஆக்கிவிட்டது. இதனால் சமாதானத்தை அடைவதற்கான தூரம் கூடிப்போய்விட்டது. சமாதானம் ஏற்பட வேண்டுமானால் யுத்த நிறுத்த உடன்படிக்கையை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அரசியல் தீர்வுக்கான அலகு என்ன? அதிகாரம் என்ன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

வட-கிழக்கு இணைவு என்பதை சர்வதேசம் வலியுறுத்துகிறது. இதை வழங்க அரசாங்கம் தயாராக இல்லை என்பதை அரசின் நடவடிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. இங்கிலாந்தில் ஒற்றையாட்சி முறைமையின் அடிப்படையில் தீர்வை அமுல்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே அடிப்படையில் இங்கும் ஒரு தீர்வைக் கொண்டு வரலாம்.

ஆனால் அதற்கான சாத்தியம் உள்ளதா என்பது பற்றி சிந்திக்க வேண்டிள்ளது. இங்கிலாந்தில் தனியான பாராளுமன்றம் இயங்குகிறது. இங்கே தமிழர்களுக்கு தனியான பாராளுமன்றத்தை ஒற்றையாட்சியின் கீழ் அரசாங்கம் வழங்கும் என்பது சாத்தியமற்றதாகவே உள்ளது.

சமஷ்டியா? ஒற்றையாட்சியா? என்பது பிரச்சினை அல்ல. ஆனால் சிறுபான்மையினருக்கு ஆட்சி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுமா என்பதே இங்கே முதன்மையான விடயமாக உள்ளது. இந்த நாட்டில் தமிழ் சமூகம் ஏனைய சமூகங்களைவிட பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. தமிழர்கள் பொருளாதார மற்றும் சமூக நிலையில் உயர்வடைய சமஷ்டி அடிப்படையிலான தீர்வு கூட எந்தளவுக்கு பயன்தரும் என்பது வினாவுக்குரியதே.

சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் அரசும் புலிகளும் வராதவரை சர்வதேசம் அழுத்தங்களை இரு தரப்புக்கும் வழங்கிக் கொண்டே இருக்கும். சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையிலான உடன்படிக்கை முறிவடைந்தது சமாதான விடயத்தில் பாதிப்பாகும்.

### சமாதானம் தொடர்பான சிந்தனைகள் சிதைக்கப்பட்டுள்ளன

முகமட் சதாத் (ஆய்வாளர்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் சிவில் சமூகத்தின் வாயை மூடியுள்ளது. அதனால் தென்னிலங்கையில் உள்ள சமூக அமைப்புக்களின் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன. மனித உரிமை மீறல் என்பது சர்வசாதாரணமான விடயமாக மாறிவிட்டது. கடந்த காலங்களைப் போல் அல்லாது சிறப்பான தீர்வுதிட்டத்தை முன்வைக்க வேண்டிய அழுத்தம் அரசுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. சர்வதேச சமூகம் அரசின் தீர்வுத் திட்டத்தை எதிர்பார்த்துள்ளது.

யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் படிப்படியாக சமாதானம் தொடர்பான மக்களின் எதிர்பார்ப்பு குறைவடைந்தே வந்துள்ளது. யுத்த நிறுத்தம் என்பது சமாதானம் ஏற்படுவதற்கான வழி. அதுவே சமாதானம் என்றாகிவிடாது. இதனை நாம் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போது ப்ரஸ்பரம் நம்பிக்கை கட்டிஎழுப்பப்பட்டதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். பல நல்லவிடயங்கள் நடந்தேறின. படுமோசமான யுத்தம் நடைபெற்ற காலத்தில் தான் சமாதானம் ஏற்பட்டது.


யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தது. எனவே தற்போது யுத்தம் மூண்டிருந்தாலும் சமாதானம் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன.

அரசியல் மயப்படுத்தப்பட்ட யுத்தம் அரசியல் மயப்படுத்தப்பட்ட சமாதானம் இவை எமது நாட்டில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வருபவைகளாக உள்ளன. இன்று யுத்தம் தொடர்பான நிரல் பெரிதாக உள்ளது. எனவே உடனடியாக அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை அமுல்படுத்துவது சிரமமாகவே இருக்கும். தீர்வுத் திட்டம் அனைத்து தரப்பினரது கருத்துக்களையும் உள்வாங்கியதாக அமைதல் வேண்டும். அப்போதுதான் அது பயனளிக்கக் கூடியதாக இருக்கும். 20 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தில் ஈடுபட்டுவரும் இரு தரப்பையும் அவ்வளவு எளிதில் சமாதானப் பாதைக்கு கொண்டுவந்து விடமுடியாது. இதில் சில பின்னடைவுகள் ஏற்படவே செய்யும். அரசு சர்வதேச அழுத்தங்களை கருத்தில் கொண்டு தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்குமானால் அது தோல்வியிலேயே முடிவடையும்.

வட - கிழக்கு இணைப்பா பிரிப்பா என்பதை வட-கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும். வட-கிழக்கு இணைப்பு என்பது இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு உந்து சக்தியாக இருந்தது. இப்போது அந்த நிலை கேள்விக்குறியாக மாறிவிட்டது. இதனை ஒரு பின்னடைவு என்றே கருதவேண்டி உள்ளது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் அமுல்படுத்தமுடியாது கிழித்தெறியப்பட்டது. ஆனால் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தீர்வுத் திட்டம் ஒன்றை பாராளு மன்றம் வரை கொண்டுவந்தார். ரணில் சமாதான ஒப்பந்தத்தை செய்தார். பின்னாளில் தென்னிலங்கையில் ஏற்பட்ட மனமாற்றமாக இதனைக் கொள்ளலாம்.

ஆனால் இன்று அடிப்படையே இல்லாமல் போயுள்ளது. சமாதானம் தொடர்பான சிந்தனைகள் சிதைக்கப்பட்டு யுத்தம் தொடர்பான ஆர்வம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதில் முட்டுக்கட்டையாக மாறலாம்.



# தரிசனம்

ராவய

04 ராவய

### அரசாங்கம் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும்

*கலாநிதி சந்திரசிறி ராஜபக்ஷ*

மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய சூழலை உருவாக்குவதே அரசாங்கத்தின் பிரதான பணி



யாக உள்ளது. பயங்கரவாதத்துடன் இணைந்த விடயங்களின் போது எப்படி செயற்படுவது என்பதே நாம் இன்று எதிர்நோக்கும் சிக்கலாகும். பேச்சுவார்த்தை தான் சிறந்த தீர்வு என்பதே எனது தனிப்பட்ட நம்பிக்கையாகும். பயங்கரவாதத்துடன் செயற்படும் போது சில சிக்கல்கள் எழலாம். இதனால் பயங்கரவாதத்திற்கு பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்திற்கு நேர்கின்றது. ஆயினும் இது சாதாரண பொதுமக்கள் தொடர்பான கருத்து நிலையாகவும் இருக்கக் கூடாது.

மறுபுறம் அரசாங்கம் சமாதானம் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது தொடர்பூடகங்களுடன் தொடர்பும் மக்களுடனான தொடர்பும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நாட்டிற்கு பாதகமான விதத்தில் செய்திகள் வெளியாகுதல், அரசாங்கத்தின் விடயங்கள் சரியான வகையில் வெளிப்படுத்தப்படாமை போன்ற பல்வேறு விடயங்களில் தொடர்பூடகங்களின் தலையீடுகள் இடம் பெறுகின்றன.

பயங்கரவாத மோதல்கள் குறித்தான செய்தி எழுத்தாக்கங்கள் ஊடகங்களில் நேர்மைத் தன்மையுடன் இடம் பெறுவதில்லை. இது சிங்கள ஊடகங்களுக்கு மட்டுமன்றி தமிழ் ஊடகங்களுக்கும் பொதுவானதாகவே அமைகின்றது. இங்கு ஊடகங்கள் பொதுவாக செயற்பட வேண்டிய முறைபற்றி அறிவுறுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சிக்கற் தன்மையை புரிந்து கொண்டு அதற்கேற்ப அறிக்கைகளை வெளியிடுவது அரசாங்கத்தின் கடமையாக அமைகின்றது.

இதேவேளை சமாதானம் தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் திருப்திகாண முடியாத நிலையே காணப்படுகின்றது. அந்த வகிபங்கை எப்படி மேற்கொள்வது என்பதில் சற்று சந்தேகம் நிலவுகின்றது. அரசாங்கத்தின் செயற்பாடுகள் திறந்த மனதுடன் இருப்பது அவசியம் என்றே நான் கருதுகின்றேன். திறந்த மனது என்ற விடயத்தை எவ்வளவு தூரம் அரசாங்கம் கடைப்பிடிக்கின்றது என்பது கேள்விக்குரியதாகும். கூறும் விடயங்கள் எதுவும அமுல்படுத்தப்படுவதில்லை. முற்றிலும் முரணாகவே அனைத்தும் நடைபெறுகின்றன. அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களும் எவ்வளவு தூரம் நீதியாக அமைந்துள்ளது என்று கூற முடியாதுள்ளது.

### செல்லும் பாதை சரியானதே

*அர்ஜுன ஹுலுகல்ல*

அரசாங்கத்தின் சமாதானச் செயற்பாடுகள் நிபுணத்துவ மட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அது வெளிநாட்டில் இருந்து எடுத்து வரப்பட்டதல்ல. சமாதான முயற்சிகளை சூழ்நிலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அரசியல் தீர்வினை துரித கதியில் முன்வைக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். கின்றோம். ஆனால் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் பெருமளவான தமிழ் இளைஞர் யுவதிகள் காணாமற் போயுள்ளனர். அவர்களின் சடலங்கள் அதனால் தொல்லைகளை அனுபவிக்கும் மக்களை விடுவிப்பது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒன்றாக நடைபெறுதல் அவசியம்.

இந்த இரண்டு நடவடிக்கைகளும் சரியான முறையில் அமுலாகுமாயின் பேச்சுவார்த்




தைக்கான அவசியம் என்ன என்பதும் முக்கிய கேள்வியாக அமைகின்றது. பேச்சுவார்த்தை

## சமாதானம் தொடர்பில்

வடக்கு கிழக்கு மக்களுக்கு வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது. சமாதான முயற்சிகள் தொடர்பில் நிபுணர்களின் யோசனைகள் பெறப்படுகின்றன. பிற நாடுகளின் திட்டங்கள் குறித்து பரிசீலனை செய்யப்படுகின்றது. மனித உரிமைகள் குழுக்களை இலங்கைக்கு வரவழைத்து அவர்களின் கருத்துக்கள் பெறப்படுகின்றன.

இதனால் சமாதானச் செயற்பாடுகள் நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளும் என்றே கூற



வேண்டும். அவசர கதியில் இதனைச் செய்ய முடியாது. பிரதேச, கிராம, மாவட்ட மட்டத்திலிருந்து இறுதியில் பாராளுமன்றம் வரை அந்த செயற்பாடுகள் பயணிக்க வேண்டும்.

இந்த செயற்பாடுகளை பேச்சுவார்த்தைக்குட்படுத்த வேண்டும். அதற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த இடைப்பட்ட காலப்பகுதியில் நிர்வாகத்தைப் பலப்படுத்த வேண்டும். அதற்கான குறுக்கு வழிகள் எதுவும் இல்லை. அதனால் இந்த யோசனைகள் அனைத்தையும் அமுல்படுத்த அனைவரும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

### அதிகபட்ச அதிகாரப் பரவலாக்கல் அவசியம்

*சட்டத்தரணி ஜாவிட் யூசுப*

சமாதான நடவடிக்கைகளில் சர்வ கட்சி மாநாடு குறித்தே



நான் பெருமளவு நம்பிக்கை கொண்டிருக்கின்றேன். இது தொடர்பில் தென்னிலங்கையின் அங்கீகாரத்தைப் பெறும் நடவடிக்கையில் ஓரளவு முன்னேற்றத்தை காண முடிகின்றது. இந்த முன்னேற்ற நிலையை துரிதப்படுத்த வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கு யுத்தச்

இந்த சர்வகட்சி மாநாட்டினால் மட்டும் இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வு கிடைக்கும் என்று கூறிவிட முடியாது. அனைத்துக் கட்சிகளினதும் யோசனைகளைப் பெற்று இறுதியில் யோசனைத்திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டியுள்ளது.

அந்த யோசனைகளை புலிகளிடம் சமர்ப்பித்து அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்

வீதிகளில் கிடக்கின்றன. இந்த சம்பவங்கள் தொடர்பாக யார் பொறுப்புக் கூறவேண்டும் என்ற விடயத்தில் அமைச்சர் ரம்புக்வெலவினதும் பொலிஸ் மா அதிபரினதும் கருத்துக்களில் முரண்பாடுகள் நிலவுவதை நாம் அவதானிக்கின்றோம்.

இந்த சூழ்நிலையில் ஜனாதிபதி மௌனமாக இருக்கின்றார். அவ்வாறாயின் அவரது அரசியல் பார்வையை பாதுகாப்பு

## அரசாங்கம் செல்லும் பாதை

பிக்க வேண்டும். இதுதான் இலக்கு. ஆனால் இவை அனைத்தும் நடைபெறுமா இல்லையா என்று கூறிவிட முடியாது. ஏனெனில் இவ்விடயத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் பல காரணிகள் உள்ளன.

உதாரணமாக தெற்கில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே இணக்கப்பாட்டிற்கு வரக்கூடிய யோசனைகள் தயாரிக்கப்படும் என்று கருதுவது கடினமாகும். ஜாதிக ஹெல உறுமய கட்சி இதற்கு அவசரப்படத் தேவையில்லை என்று கூறுகின்றது. ஆனால் இவ்விடயத்தில் நாம் துரித கதியில் செயற்பட வேண்டும் என்றே நான் கூற விரும்புகிறேன்.

அரசாங்கத்தின் பொது இணக்கப்பாடு தான் அதிகப்பட்ச அதிகாரப் பரவலாக்கலாக அமையும். இந்த யோசனைகளின் மூலம் அரசாங்கம் அந்த இடத்திற்கு வரவேண்டும். இல்லாவிடின் யுத்தத்திற்கும் நாட்டின் ஸ்திரமற்ற நிலைக்கும் தீர்வு கிட்டாது.

### அரசியல் தீர்வை தலைகீழாக்கிவிட்டார்கள்

*சட்டத்தரணி நிமல்கா பெர்ணாண்டோ*

இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வகிபங்கே பிரதான இடத்தை வகிக்கின்றது என்றே நான் கருதுகின்றேன். பாராளுமன்றத்திற்கு முக்கிய இடமில்லை. அவரின் செயற்பாடுகளிலேயே அரசாங்கத்தின் ஸ்திர தன்மை தங்கியுள்ளது என்று நான் தனிப்பட்ட ரீதியில் சிந்திக்கின்றேன்.

அந்த கோணத்தில் சிந்தித்துப் பார்த்தால் சர்வகட்சி மாநாட்டின் பெரும்பான்மையினரின் கருத்துக்களை முன்னோக்கி எடுத்துச் சென்று பேச்சுக்கு தேவையான அரசியல் சூழலை உருவாக்க அவரால் இயலுமாகவுள்ளது.

எந்தத் தீர்வையும் நாம் தமிழ் மக்களுக்கே பெற்றுக் கொடுக்

அமைச்சின் பயங்கரவாத தடைச் சட்டத்துடன் பிணைத்து வைத்துள்ளார் என்றே கருத வேண்டியுள்ளது. அவருக்கு தனிப்பட்ட அரசியல் பார்வையொன்றிருந்தால் தமது தீர்



மானங்களின் போது அவ்வாறான கட்டுப்பாடுகள் விடுபட்டிருக்கும். பாதுகாப்பு, பயங்கரவாதம என்ற இரு விடயங்களில் அவர் சிக்குண்டு நிற்கின்றார்.

இது எல்லா அரசியல் தலைவாகளும் அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்காமல் இருக்க கடைப்பிடிக்கும் உத்தியாகும். இந்த அரசாங்கத்தில் யுத்தத்தை உறுதிப்படுத்தி அரசியல் தீர்வை தலைகீழாக்கி விட்டார்கள்.

செல்லும் பாதையில் யுத்தத்தின் வகிபங்கை மாத்திரம் அரசாங்கம் தன்னகப்படுத்தியுள்ளது.

### இங்கு பயங்கரவாதப் பிரச்சினையும்கலாசாரப் பிரச்சினையுமே உள்ளது

*லூஷன் புலத்சிங்கள*

பயங்கரவாதம் என்ற நோயைக் குணப்படுத்த மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டை பின்பற்றிக் கொண்டிருக்கின்றது.

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து அகற்ற வேண்டும் என்பதே அந்த நிலைப்பாடாகும். அத்துடன் செய்ய வேண்டிய இரு விடயங்களை அரசாங்கம் மேற்கொண்டிருக்கின்றது. ஒன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது மற்றையது பயங்கரவாதத்திற்கு இரையாகி

நடத்தவும் ஏதாவது பிரச்சினைகள் இருக்க வேண்டுமே. கடந்த பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் பேச்சுக்களை முறித்துக் கொண்டு விலகிச் சென்றனர். பேசுவதற்கு ஒன்றுமே இல்லை என்ற செய்தியை வழங்கிவிட்டே அவர்கள் வெளியேறிச் சென்றனர்.

பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துவிட்டு அதனை உதைத்துவிட்டு சென்றவர்களுடன் பேசுவதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை. பயங்கரவாதத்திறகான அடிப்படையை தேடிக் கண்டுபிடித்து அதனை அதன் வழியில் அழிப்பதனையே மேற்கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தை நாம் எடுத்துக் கொண்டால் ஐ.ஆர்.ஏ. அமைப்பு நூற்றாண்டு காலமாக இருக்கும் அமைப்பாகும். பிற அரசுகள் தம்மை அடக்குமுறைக்குட்படுத்துவதாக அவர்கள் கருதினார்கள்.

ஆனால் வடக்கு கிழக்கு பிரதேசங்களை வேறு அரசுகள் அடக்கு முறைககுட்படுத்தியுளளன என்ற உணர்வு அங்கில்லை. 56இல் மொழிப் பாகுபாடு ஏற்பட்ட பின்னரேயே இனவாதிகள் இவ் விடயத்தை ஊதிப் பெரிதுபடுத்தினர். இதனாலேயே இனப்பிரச்சினையும் ஆரம்பமாயிற்று.

இல்லாவிட்டால் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எந்த பிரச்சினைகளும் ஏற்பட்டிராது. ஒரே கலாசாரம், ஒரே இரத்தம், ஒரே மக்கள் ஆனால் இரு மொழிகளைப் பேசுகின்றனர்.

*கலந்துரையாடியவர்*

**லசந்த ருகுணகே**

இது பயங்கரவாத கலாசாரப பிரச்சினை என்றே நான் கருதுகின்றேன். மாறாக இனப்பிரச்சினை அல்ல. கலாசாரப் பிரச்சினையை கலாசாரப் பிரச்சினையாகக் கருதியும் பயங்கரவாதப் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாகவும் கருதி தீர்வுகாண வேண்டும்.



# தரிசனம்

ராவய

ஒருவர் சமாதானம் குறித்த ஒரே சிந்தனையுடன் செயற்படுபவராக இருந்தால் அவரது வார்த்தைப் பிரயோகங்கள், கலந்துரையாடல்கள், நிகழ்ச்சி நிரல்கள் அனைத்தும் சமாதானத்தை இலக்காகக் கொண்டதாகவே அமைந்திருத்தல் வேண்டும்.

# வார்த்தைகளினாலும்

சமாதானம் குறித்து நேர்மையான சிந்தனை மனப்பாங்கு இருக்குமாயின் மேற்கூறப்பட்ட அனைத்துப்



# கைகளினாலும்

பணிகளும் சமாதானத்தை நோக்காகக் கொண்டதாகவே அமைதல் வேண்டும். தன்னுடன் பணியாற்றும் மறுதரப்பு சமாதானத்திற்கு சார்பானவர்களாக இல்லை என்று கூறிக்கொண்டு அடிப்படை செயற்பாடுகளை பின்னடிப்பதானது குறித்த அந்நபரிடம் சமாதானம் குறித்த நேர்மையான அக்கறைத் தன்மை இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஜனாதிபதி நாட்டை சமாதானத்தை நோக்கி வழிநடத்துவாராயின் தன்னைச் சூழவுள்ள சகல விதமான சக்திகளையும் சமாதானத்தை நோக்கி வழிநடத்துதல் வேண்டும். அரசியல் கட்சிகளையும், ஊடகங்களையும் அவ்வாறு வழிநடத்தக்கூடிய சக்திகளாக கருத முடியும்.

நாம் ஒன்றுபட்டு அவ்வாறு செயற்படுவத னால் பிரபாகரனால் சமாதானத்திற்கு எதிரான வேலைகளை முன்னெடுக்க முடியாது. பிரபாகரன் பெரும்பான்மை இனத்தை நோக்கி நேசக்கரம் நீட்டாவிட்டால் அவரைச் சூழவுள்ள தமிழ் மக்களே அவரை எதிர்க்கக்கூடும்.

இரண்டாவதாக அவர் சர்வதேச சமூகத்தினர் மத்தியில் தலைகுனிய நேரிடும். தென்னிலங்கையில் இவ்வாறானதொரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுமாயின் சிங்களப் புலிகள் என்ற ஒரு சாரார் தோன்றியிருக்க மாட்டார்கள்.

இன்று நாட்டில் நிலவும் அரசியல் கட்டமைப்பினால் யுத்தநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் அவ்வாறானதொரு நிலை ஏற்படுத்தப்படுவதைப் போன்ற மோசமான நிலை வேறில்லை என்று கூறலாம். இது சமாதானம தொடர்பில் அர்ப்பணிப்பு மனோபாவத்துடன் செயற்படும் அரசியல் தலைவர்கள், தலைவிகள் செய்யக் கூடாத காரியம்.

அரசாங்கம் ஆரம்பம் முதலே சமாதானம் தொடர்பில் அர்ப்பணிப்பு மனோபாவத்துடன் செயற்படவில்லை என்றே நான் கருதுகின்றேன். மக்களை ஏமாற்ற சமாதானத்தை முன்னிறுத்தியது கவலைக்குரிய விடயமாகும். இந்த ஏமாற்றுச் செயலுக்கு பிரபாகரன் ஆச்சரியமான மாற்று வழியொன்றை தெரிவு செய்துகொண்டார்.

தமிழர்கள் மட்டுமே திரண்டிருந்த புலிகள் இயக்கத்தில் சிங்களவர்களையும் தந்திரோபாயத்தின் மூலம் இணைத்துக் கொண்டார். அதாவது படைத்தரப்பு, பொலிஸ் மற்றும் சிங்கள இளைஞர்கள் ஆகியோரை தனது போராட்டத்தில் இணைத்துக்கொள்ள பிரபாகரன் உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பது அண்மைய சம்பவங்களை எடுத்துநோக்கும் போது தெரிகின்றது.

வேலைவாய்ப்பின்மை காரணமாக புலிகளுடன் இணைவதன் மூலம் பணம் உழைக்க சில இளைஞர்கள் எண்ணியிருக்கலாம். மறுபுறம் இராணுவத்தின் ஒரு சில உயரதிகாரிகள் பணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு புலிகளுக்கு தேவையான தகவல்களை வழங்கியதாகத் தக்வல்கள் வெளியாகின. இதன் மூலம் பிரபாகரன் சிங்களவர்களினூடாக யுத்தத்தை தென்னிலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்தார். இதனால் எவரும் எதிர்பார்க்காத நிகழ்வுகள் இடம் பெற்றன.

# யுத்தம் புரிதல்

அதாவது அரசாங்கம் அடக்குமுறைச் சட்டத்தை அதிகப்படுத்தி சிங்கள சமூகத்தை அடக்குமுறைக் குட்படுத்தியது. இந்த நிலையில் சமாதானத்திற்கு பதிலாக தெற்கில் மோசமான நிலைமை உருவாவதை தடுக்க முடியாது.

சமாதானத்தை நோக்கி தனது கரத்தை நீட்டுவதாக ஜனாதிபதி அடிக்கடி கூறிக்கொண்டிருக்கின்றார். ஆனால் வார்த்தைகளினாலும், கரங்களினாலும் அவர் யுத்தம் புரிந்துகொண்டிருக்கின்றார். ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டிற்கு சமமாக நிபுணர்களினாலும் சமாதான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த யோசனைகளை அமுல்படுத்தக்கூடிய உளவியல் மற்றும் சுற்றுபுறச்சூழல் நாட்டில் நிலவுகின்றதா என்பதே இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும்.

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு உலகத்தில் உள்ள சிறந்த தீர்வைக் கொண்டு வந்தாலும் அத்தீர்வினை

சட்டத்தரணி
**எஸ்.ஜி.புஞ்சிஹேவா**
*(கலந்துரையாடலின் தொகுப்பு)*

உள்வாங்கிக் கொள்ளக்கூடிய மனோநிலை இல்லாவிட்டால் எந்த யோசனைகளையுமே நடைமுறைப் படுத்த முடியாது. இந்த நிலையில் எந்தத்தீர்வும் வெறும் காகிதமாக மட்டும் இருப்பதனை தவிர்க்க முடியாது. யோசனைகள் தொடர்பில் இன ரீதியான சொல்லாடல்கள் மட்டுமே இங்கு நிலவுகின்றன.

பிரச்சினையின் பாரதூரத் தன்மையை உணர்ந்து இனவாதத்திற்கு இடமளிக்காமல் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வினை மதித்து செயற்படுதலே நாட்டு தலைவரின் கடமையாக இருக்க வேண்டும். சமாதானத்தை விரும்பும் நாட்டு தலைவர் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்தும் வகையில் செயற்படவேண்டும்.

மாறாக யுத்தத்தை வரவேற்கும் வகையில் அவர் பேசக்கூடாது. நேர்மைத் தன்மையும் அர்ப்பணிப்பு மனோபாவமும் இருந்தால் மட்டுமே ஒரு தலைவரினால் சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்.

## ஆசிரியர் குறிப்பு

**அரசாங்கம் விரிவான சமாதான செயற்பாடுகளுக்கான திட்டத்தை தயாரித்துள்ளது. சர்வகட்சி மாநாடு அதன் ஒரு அடிப்படை திட்டமாக அமைவதுடன் சர்வகட்சி நிபுணர் குழுவின் யோசனைகளும் கட்சிகளின் யோசனைகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது.**

**இச் சந்தர்ப்பத்தில் முன்னெடுக்கப்படும் யுத்தம் சமாதானத்திற்கான யுத்தம் என்று பிரசாரப் படுத்தப்படுவதுடன், யுத்தம் சமாதான முயற்சிகளுக்கு சமமாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்று அரசாங்கப் பிரதிநிதிகள் கூறி வருகின்றனர். இந்த வகையில் அரசாங்கத்தின் சமாதான செயற்பாடுகளின் இயல்பு எவ்வாறானது என்பதை இந்த இரட்டை நிலையை அடிப்படையாகக்கொண்டு கலந்துரையாடுதல் அவசியமாகும்.**



## பாய் ஒன்றை பின்னுவோம் வாரீர்

*பனம் ஓலையையும்*
*தென்னம் ஓலையையும்*
*ஒன்றொன்றாக*
*வரிசைப்படுத்தி*
*அழகிய பின்னல் கொண்ட*
*பாய் ஒன்றைப் பின்னுவோம் வாரீர்*

*வடக்கில்*
*தெற்கில்*
*மேற்கில்*
*கிழக்கில்*
*இணைந்து*
*கைகோர்த்து வாரீர்*
*குழந்தைகளே ஒன்றாக அமர்ந்து*
*பாய் ஒன்றை பின்னுவோம் வாரீர்*

*உடைகள்*
*வார்த்தைகள்*
*வேறானாலும்*
*பசியில்*

*ஒரே குரலில் அவர்கள்*
*ஒரே பாடலைப் பாடுகிறார்கள்*
*என்பது அனைவருக்கும் புரியும்*

**ஜயவடு வித்தான**
**(பாய்ஒன்றைப் பின்னுவோம் கவிதைத் தொகுப்பிலிருந்து)**



# தரிசனம்


சரிநிகர்

# மகிந்த ராஜபக்ஷவும் தமிழர் நிலைமையும்

பேராசிரியர் கா. சிவத்தம்பி

மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதி பதவி யேற்று இன்னும் பூரணமாக இரண்டு வருடங்கள் முடியவில்லை. ஆனால் இந்த இரண்டு வருட காலத் துள் அவரது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தமி ழர் மத்தியில் பெருத்த சந்தேகங்களையும், அவற் றிலும் பார்க்க அங்கலாய்ப்புக்களையும் ஏற்படுத் தியுள்ளது. ரணில் விக்ரமசிங்கவை அரசியல் ரீதி யாக நம்பமுடியாது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவோ சற்று நிதான மான யதார்த்தவாதி என்ற விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஏற்புரையோடு வந்தபோது தமிழ் மக்கள் இவரிடமிருந்து நிறைய எதிர்பார்த் தார்கள். ஆனால் 2007மார்ச் மாத நடுப்பகுதியில்



நின்று பின்னோக்கிப் பார்க்கும் போது மிகப் பெரிய ஏமாற்றங்களே ஏற்பட்டுள்ளன என்பதனைப் பதிவு செய்யாமல் விடுவது புதிய ஜனாதிபதி அவர்களுக்கு அரசியல் யதார்த்த உண்மை ஒன்றினை எடுத்துக் கூறத்தவறுவதாகும் எனும் கருத்தினை அழுத்த மாக வலியுறுத்த வேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் இவரை யதார்த் தவாதி என்று கூறியமைக்கான காரணங்கள் எவை யாக இருக்கலாம் என்பது ஒரு முக்கியமான கேள்வி யாக இருக்க சிறிபதி சூரியாராட்சியின் இன்றைய குற்றச்சாட்டுக்களை மனதில் கொள்ளவும். தென் னிலங்கையைப் பொறுத்தவரையில் இவரது அதி காரத்துக்கான வருகை பிரதானமாக சிங்களத்துவ நிலைப்பாட்டினரின் ஒருங்கு சேர்வையாக அமைந் திருந்தது என்ற உண்மையை மறந்துவிடக்கூடாது. ஜே.வி.பி., ஹெல உறுமயவின் இணக்கம் இவ் விடத்தில் மிக முக்கியமானது. தென்னிலங்கை யைப் பொறுத்தவரையில் இவர் பிரதான எதிரியாக கொள்வது முன்னைய ஜனாதிபதி சந்திரிகாவே ஆவார்.

அவருக்கு எதிராக த்னது பலத்தை நிறுவிக்கொள்வ தில் தொடக்க நாட்களில் ஆர்வம் காட்டிய தற் போதைய ஜனாதிபதி அவர்கள் வடக்கு கிழக் கைப் பொறுத்தவரையில் சம்பூர் சம்பந்தமாக எடுத்த நிலைப்பாடு மிக முக்கியமானதாகும்.

2002போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள் ளும் அதேவேளையில், சம்பூரை மீளக் கைப்பற்றி யமை தொடர்ந்து விடுதலைப் புலிகளின் மேல் தாக் குதல் நடாத்துகின்றமை சிங்கள மக்களிடையே இவருக்குப் பெருத்த அரசியல் வரவேற்பை வழங் கியுள்ளது என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது.

ஆனால் அதற்கு மேற் சென்று வடக்குக் கிழக் கைப் பொறுத்தவரையில் அவர் மேற்கொண்ட நட வடிக்கைகள் அவற்றிலும் பார்க்க அவருடைய கூற் றுக்கள் பொதுப்படையான தமிழ் மக்களுக்கு மாத் திரமல்லாமல், அவருக்கு ஆதரவு வழங்கும் தமிழ் அரசியற் சக்திகளுக்கும் பெருத்த இடர்பாட்டை ஏற் படுத்தியுள்ளது.

சம்பூரில் எடுத்த திசை திருப்பு நடவடிக்கையின் ஏறத்தாழ தர்க்கரீதியான முடிவாக வடக்கு -கிழக்கு இணைவு யதார்த்தத்தை முற்றிலும் இல்லாமற் செய்துள்ளார். திருகோணமலையை ஒரு தனி மாவட்டமாகப் பிரகடனப்படுத்தியது மாத்திரமல் லாமல் மட்டக்களப்பு மாவட்டத்தையும் அம்பாறை மாவட்டத்தையும் ஏறத்தாழ தனித்தனிக் கூறுகளாக் கிக் கொண்டார்.

இலங்கையின் அண்மைக்கால அரசியல் வரலாற் றில் முன்னர் ஒருபோதும் காணப்படாதளவுக்கு முஸ்லிம் அமைச்சர்கள் அதிகமாக உள்ள அமைச் சரவை இவரதேயாகும். முஸ்லிம்களின் ஏற்புரை யினை நிச்சயப்படுத்திக் கொண்ட அவர் மாலைத் தீவுக்குச் சென்ற போது, வடக்கு கிழக்குப் பிரச் சினை என்பது இப்போது இல்லை. வடக்குப் பிரச் சினை மாத்திரமே உண்டு எனவும் கூறினார். (இந்தப் பின்புலத்தில் நோக்கும் போது வெபர் மைதானச் சம்பவங்களை இவர் எதிர்நோக்கவே இல்லையா என்ற வினா கிளம்புகிறது)-கிழக்கை மூன்று அலகு களாக்கியது இவருக்கு ஆதரவு வழங்கும் தமிழ் அரசியல் சக்திகளுக்கு பெருத்த அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு மேல் வடக்கு என வரும் பொழுது அது சம்பந்தமாகவும் அவர் மிகமிகத் தீர்மானகரமான ஒரு முடிவினை எடுத்துள்ளார். அதன் படி வடக்கில் நிர்வாகத் தலைநகராக வவுனியாவே அமையும் எனும் அறிவிக்கப்படாத பிரகடனம் ஆகும்.

ஏ-9 பாதை மூடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத் திற்கு கடல் வழிமார்க்கமே பொது மக்களுக்கான ஒரேயொரு வழி என்ற நிலைமை ஏற்பட்ட சூழலில் வவுனியாவை வடக்கின் மையப்பகுதியாகக் கொண் டுள்ளமை மிக உன்னிப்பாக நோக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

முல்லைத்தீவு, மன்னார் கண்காணிப்புக்கு வவு னியா வாய்ப்பான ஒரு மையம் எனினும் ஓமந்தைக் கப்பாலுள்ள வன்னியையும் யாழ்ப்பாண தீபகற் பத்தையும் வவுனியாவில் இருந்து கட்டுப்படுத்துவது என்பது யதார்த்தமான ஒரு நிலைப்பாடு அல்ல.

ஆனால் யாழ்ப்பாண தீபகற்பத்துள் படையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாழ்.மாவட்ட மக்களிடையே ஏற்படுத்தியுள்ள திகில் உணர்வு கார ணமாகவும் அதிலும் பார்க்க அப்பகுதி மக்களுடைய குறைந்தபட்ச அத்தியாவசிய உணவுப் பங்கீட்டை உறுதிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதாலும் தீபகற்பப் பிரதேசத்தினுள் நிச்சயமான ஒரு திகில் உணர்வை ஏற்படுத்தி உள்ளது என்பதையும் மறந்து விடக்கூடாது. இந்தப் பின்புலத்திலேயே தான் வடக்கு முழுவதற்கும் வவுனியா தான் மையம் என்கிற நிலைப்பாடு அரசாங்க நிலையில் வலுவுள்ள ஒன் றாகவே தெரிகின்றதெனலாம்.

இந்தப் பின்புலத்திலேயே தான் இவை யாவற் றுக்கும் ஏறத்தாழ சிகரம் வைத்தாற் போல ஆட் கடத்தல் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஆனால் அது திடீரென ஒரு சர்வதேசப் பிரச்சினையாக மாறி யுள்ளது. ஒரு புறத்தில மனோகணேசனுடைய செயற் பாடுகளும் மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி யின் வெளிப்படையான கண்டனங்களும் அரசாங்கத் துக்கு பெருத்த சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் போதாததற்கு சில நாட்களுக்கு முன் னால், பொலிஸ்மா அதிபரே இராணுவத்தினரும் இராணுவ பொலிஸ் சேவையில் இருந்தவர்களுமே இதனைச் செய்கிறார்கள் என்று கூறிவிட்டார். இது சர்வதேச நிலைப்பாட்டை மேலும் சிக்கல்படுத்தி உள்ளது. இதன் காரணமாகவே சென்ற ஞாயிறன்று ஜனாதிபதி அவர்கள் பொலிஸாருக்கு நிதானமாக நடந்து கொள்ளுமாறு வற்புறுத்தி உள்ளார். இந்தச் செய்தி சர்வதேச ஊடகங்களில் முக்கியமான ஒன் றாக மாறியுள்ளது.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் அனுதாப அலையை வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதான செய்தி இல் லாமற் செய்துவிடும் என்றெண்ணிய வேளையில், வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களின் நிலை தமிழ கத்திற்கு மேலும் சில அகதிகளை அனுப்புகின் றதன் காரணமாக ஆட்சியில் உள்ள திராவிட முன் னேற்றக் கழகமே சென்னையிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகரது அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப் பாட்டம் நடாத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற் படுத்திவிட்டது. தென்னிலங்கையைப் பொறுத்த வரையில் இப்பொழுது வந்த மிகப் பெரிய சிக்கல் யாதெனில் ஒரு புறத்தில் தமிழ் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டு மென்ற குரல் ஓரளவுக்கேனும் வலியுறுத்தப்படு கின்ற அதேவேளையில், மறுபுறத்தில் ஜே. வி.பி. ஹெல உறுமய என்பன எதையுமே கொடுக்க வேண் டாம் என்று நிற்கிறார்கள்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி வந்த காலம் முதல் இந்த ஜனாதிபதி வரும்வரை நிறைவேற்றதிகாரங்களைப் பயன்படுத்திய ஜனாதி பதிகள் அமைச்சரவை பாராளுமன்ற வட்டங்களுக்கு வெளியே கொண்டு செல்லவில்லை.

ஆனால் இப்போதைய ஜனாதிபதியின் சகோதரர் கள் உண்மையான அதிகார மையங்களாகக் கிளம்பி உள்ளனர். பாராளுமன்றத்திற்கோ அமைச்சர வைக்கோ சுதந்திரக் கட்சிக்கோ கணக்குக் காட்ட வேண்டிய அவசியமில்லை.

இந்தப் பின்புலத்திலேயே மங்கள, சிறிபதியின் அறைகூவலைப் பார்க்க வேண்டும். ஜே.வி.பியை ஜனாதிபதி விட விரும்பினாலும் ஜனாதிபதியை ஜே.வி.பி.விட விரும்புவதாக இல்லை என்று தெரி கிறது.

தென்னிலங்கையின் இந்த அரசியல் சுழிகள் வடக்குக் கிழக்கில் ஜனாதிபதியின் அதிகார ஸ்தாபி தத்துக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் நிலைமையே ஏற்படுத்தியுள்ளது. இவை காரணமாக வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், ஜனாதி பதிக்கு நிச்சயமான தலையிடியாக மாறியுள்ளன என்று படிப்படியாக வெளித்தெரிய வருகிறது.

இவ்வாறு நோக்கும் போது இன்னொரு முக்கிய அரசியல் உண்மையையும் பதிவு செய்துகொள்வது அவசியம். அதாவது இப்பொழுது ஜனாதிபதியுடன் சேர்ந்திருப்பவர்கள் எப்பொழுதுமே அதிகாரத்தில் உள்ளவர்களுடன் சேர்ந்திருப்பவர்கள் தான்.

இவர்கள் அரசாங்கத்திற்குப் பிரச்சினை ஏற்படும் பொழுது இருந்த இடம் தெரியாமல் மாறிவிடுவார் கள். இந்த நிலையில் ஜனாதிபதியிடத்து இருப்ப தாகக் கருதப்படும் யதார்த்த நோக்கு அவரிடம் தொடர்ந்திருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்க ளின் பிரார்த்தனை ஆகும்.

## அன்பு வாசகர்களே!

“தரிசனம்” பற்றிய தங்களின் கருத்துக்கள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அனுப்பவேண்டிய முகவரி:-

“தரிசனம்”
வலம்புரி,
இல: 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நியாயமற்ற நியமனங்கள் செய்வதும் தவறு; அதனைக் காய்ப்பது அதனிலும் தவறு.

—அப்துர் ரஹீம்

வலம்புரி

# அரசியலில் குடும்ப ஆதிக்கம் ஆட்சிப் பதவிக்கு மாரகம்

'மாரகத்துச் சனி' என்ற சொற்பதம் சோதிடத்தில் முக்கியமானதொன்றாகும். மனிதர்களின் ஆயுளுடன் தொடர்பு பட்ட விடயமாக மாரகத்துச் சனி இருப்பதால், ஒருவரின் ஆயுளைப்பற்றி ஆராயும் சோதிடர் ஜாதககாரனுக்கு மாரகம் எப்படியுள்ளது என்றே ஆராய்வார்.

இவ் ஆராய்வு அரசியலுக்கும் பொருந்தும். அவ்வகையில் உலக நாடுகளின் அரசியல் சாதகத்தை ஆராய்ந்தால் அநேகமான ஆட்சிப் பதவிகள் குடும்ப ஆதிக்கம் என்ற மாரகத்தால் அழிந்து போனதைக் காணமுடியும்.

இதில் இலங்கை மட்டும் விதிவிலக்கானதல்ல. இலங்கையின் கடந்தகால ஆட்சிப்புலத்திற்கும் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிப்புலத்திற்குமிடையே நிறைய வித்தியாசம் உண்டு.

அதாவது, இலங்கையின் அரசியலில் ஓர் குடும்ப அரசியல் பாரம்பரியம் கொண்டதாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் குடும்பத்தையே கூறிக்கொள்ளலாம்.

எனினும் அங்கு ஓர் தொடர்முறை நடைமுறையில் இருந்தது. பண்டாரநாயக்கா இறந்த பின்னர் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானார்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முதுமை அவரது மகள் சந்திரிகா குமாரதுங்காவிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை வழங்கியது.

இங்கு ஓர் குடும்ப அரசியல் இருந்தாலும் ஒருவரின் பதவியில் அவரின் குடும்ப உறுப்பினர்களின் ஆதிக்கம் இருக்கவில்லை.

இதனால் பண்டா,சிறிமா,சந்திரிகா ஆகியோரின் அரசியல் இடைநடுவில் மாண்டுபோகாமல் பாதுகாக்கப்பட்டது.

ஆனால்,தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு அப்படியல்ல. அவரது நிறைவேற்று அதிகாரத்தில் அவரின் குடும்ப உறவுகள் பங்கு போடுகின்றன.

இந்த உண்மையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் புரிந்து கொள்ளமுடியவில்லை. அல்லது புரிந்து கொண்டாலும் சகோதர உறவை தள்ளி வைக்க முடியவில்லை என்றே கூறவேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கைக்கு ஒவ்வாது என்ற கருத்துகளுக்கு அப்பால், நிறைவேற்று அதிகாரத்தைவிட குடும்ப ஆதிக்கம் மிகவும் மோசமானது.

அது ஆட்சியை கவிழ்ப்பதற்கு-பதவி துறப்பிற்கு வழிவகுக்கும் என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

இதனையே இலங்கையின் சமகால அரசியல் நிலைமைகள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை விட அவரது சகோதரரும்,பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவின் செயற்பாடு எல்லை மாறிவிட்டதாக கருதப்படுகின்றது.

இக்கருத்துநிலை மகிந்த ராஜபக்ஷவுக்கு அவ்வளவு ஆரோக்கியமானது அல்ல. அதன் அடிப்படையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக்கு அவரின் குடும்ப ஆதிக்கம் மாரகமாகி விடுமோ என்ற அங்கலாய்ப்பு பலரிடமும் இருக்கவே செய்கின்றது.

# சலுகைகளை தொடர்ந்து பெறுவதற்காகவே மக்கள் மீளக் குடியேற மறுக்கின்றனர்

## பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கி மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள போதிலும் அகதிகளாக இருக்கின்றபோது கிடைக்கின்ற சலுகைகளை இழப்பதற்கு விரும்பாததன் காரணமாகவே அவர்கள் மீளக்குடியமர்வதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதி முகாம்களில் வாழ்கின்றவர்களை மீளக் குடியேற்றுவதற்காக அரசாங்கம் பாதுகாப்பு மற்றும் இதர வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றபோதும் மக்கள் அங்கு செல்ல மறுக்கின்றனர்.

கிண்ணியா மற்றும் மூதூருக்கு இடைப்பட்ட பகுதியிலேயே மக்கள் மீளக்குடியேற்றப்படுகின்றனர். அந்தப் பகுதி முதலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. குறிப்பாக மணிராசகுளம், உப்பாறு போன்ற பகுதிகளிலிருந்து சுமார் 827 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு இருந்தனர்.

அந்தப் பகுதிகளை அரசாங்கம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள போதும் மக்கள் அங்கு சென்று மீளக் குடியேறுவதற்கு மறுக்கின்றனர். அந்த மக்களை உள் நோக்கம் கொண்ட சக்திகளே செல்ல விடாமல் த[illegible]கின்றனர். அந்தப் பகுதிக்கான பாதுகாப்பை அரசாங்கப் படையினர் வழங்கியிருக்கின்றனர். வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கடந்த 15 வருடங்களாக இல்லாமல் இருந்த படகு சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது. அரசாங்கம் சகல வசதிகளையும் செய்து கொடுத்துள்ள இந் நிலையில் அகதிகளாக இருக்கின்றபோது கிடைக்கும் சலுகைகளை அவர்கள் இழக்க விரும்பாததன் காரணமாகவே அவர்கள் அங்கு செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அந்தப் பகுதிகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்தபோது அந்தப் பகுதிகளில் எவ்விதமான அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை. எனினும் தற்பொழுது அந்தப் பகுதிகளில் அரசாங்கம் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. விடுதலைப்புலிகளும் வேறு சில சக்திகளும் கொடுக்கின்ற அழுத்தங்கள் காரணமாகவே அகதிகள் அந்தப் பகுதிகளுக்கு செல்ல மறுக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

# புலிகளின் யுத்த வெற்றியைத் தடுக்கவே இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவில் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கையில் மறைந்து கொண்டிருக்கும் மூலம் விடுதலைப்புலிகள் வெற்றி ஈட்டுவதனைத் தடுப்பதற்காகவே பாதுகாப்பு படையினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொண்டலிசா றைசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே அமைச்சர் றோகித போகொல்லாகம இதனைத் தெரிவித்ததாக அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அரசாங்கம் [illegible] இருப்பதாகவும் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்பகுதி அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் இணக்கப்பாட்டுடன் அரசியல் சட்டத்தை மாற்றி சிறுபான்மையினர் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வுகாண ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்வுயோசனைகளை வெகுவிரைவில் சர்வகட்சிக்குழுவில் முன்வைக்கவுள்ளனர். சர்வகட்சி நடவடிக்கை அனைத்தும் ஏப்ரல் மாதத்தில் பூர்த்தியடையும் என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ந-3)

# ஊடகவியலாளர்களையும் அரசியல் கட்சிகளையும் அச்சுறுத்தி ஆட்சி செய்வதற்கு அரசு முயற்சி

## சர்வதேச அமைப்புக்களூடாக நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது ஐ.தே.க.

ஊடகவியலாளர்களையும் அரசியல் கட்சி உறுப்பினர்களையும் அச்சுறுத்தி நாட்டை ஆட்சி செய்வதற்கு அரசாங்கம் முயல்கின்றது. அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த அனைத்து சர்வதேச அமைப்புக்களூடாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டில் அனைத்து இன மக்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதர நிறுவனத்தின் அட்டூழியங்களை பார்த்து பொறுத்துக் கொண்டு அச்சத்துடன் சந்தேகத்துடனும் வாழவேண்டிய சூழலை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

இதனை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி அனைத்து சர்வதேச அமைப்புக்களூடாகவும் நடவடிக்கை எடுக்கும்.

நாட்டில் இடம்பெறும் கடத்தல், படுகொலைகள் மற்றும் காணாமல்போதல் போன்ற சம்பவங்களுடன் அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

அண்மையில் மக்கள் சந்திப்பு என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஜனாதிபதியுடன் கலந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஒருவிடயத்தை கூறினார்.

அதாவது ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி.,மலையகக் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் ஆகியோர் கடத்தப்படுவதில்லை என்று அவர் கூறியிருந்தார். அப்படியானால் ஏனையவர்கள் கடத்தப்படுவதில் அரசாங்கத்துக்கு தொடர்பு இருப்பதனை கோத்தபாய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார். இது மிகவும் பயங்கரமான விடயமாகும். கடத்தல்களுடன் அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் செயற்பாட்டையே கோத்தபாய மேற்கொண்டுள்ளார்.

அச்சமும் சந்தேகமும் அற்ற முறையில் அனைத்து மக்களும் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதாக மகிந்த சிந்தனையில் கூறப்பட்டது. ஆனால் நிலைமை என்ன?

நாட்டில் அனைத்து இன மக்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதர நிறுவனத்தின் அட்டூழியங்களைப் பார்த்து பொறுத்துக்கொண்டு அச்சத்துடனும் சந்தேகத்துடனும் வாழவேண்டிய சூழலையே அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர்கள் என்ற பெயரில் இரண்டு உத்தியோகப்பற்றற்ற ஜனாதிபதிகள் இந்த நாட்டை ஆட்சி செய்கின்றனர். ஜனாதிபதியின் சகோதரர்கள் ஆட்சி செய்வதற்காக மக்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களிக்கவில்லை.

அவ்வாறு ஜனாதிபதி சகோதரர்களை உயர் பதவியில் அமர்த்துவார் என்று மக்களுக்குத்தெரிந்திருந்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்திருக்கமாட்டார்கள். கடந்த ஐக்கிய தேசியக்கட்சியின் இரண்டு வருட ஆட்சிக் காலத்தின்போது அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உறவினர் எவரையும் பதவியில் அமர்த்த வில்லை என்பதனை நினைவூட்டுகின்றோம்.

இன்று நாட்டில் கடத்தல், காணாமல் போதல், படுகொலைகள், சித்திரவதைகள் என்பன அதிகரித்து விட்டன. மனித உரிமை பாரியளவில் மீறப்பட்டு வருகின்றன. சர்வதேச சமூகம் எமது நாட்டை குற்றஞ் சுமத்தும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது சட்டரீதியாக கைதுசெய்யும் நடவடிக்கைகளை நாங்கள் ஏற்கவில்லை. ஆனால் அரசாங்கம் ஊடகவியலாளர்களையும் அரசியல் கட்சி உறுப்பினர்களையும் அச்சுறுத்தி நாட்டை ஆட்சி செய்ய முயற்சிக்கின்றது. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராச்சியின் அமைச்சின் கீழ் இளைஞர் படையணியின் தலைவராக செயற்பட்ட படையதிகாரி தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரைப் பார்வையிடச் சென்ற தேரர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார். அரசாங்கத்திற்கு எதிராக எழுதினால் ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். தற்போதைக்கும் பல ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தலையில்லாமல் முண்டங்களும் முண்டமில்லாத தலைகளும் மீட்கப்படுகின்றன.

இவற்றைப் பார்த்துக்கொண்டு இதற்குப் பின்னரும் பொறுமையாக இருக்க நாங்கள் தயாராக இல்லை. மனித உரிமை மீறல்களை எதிர்த்து எந்த மட்டத்திலும் செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற்கு ஊடகங்கள் அச்சமின்றி செயற்படவேண்டும்.

விடயங்களை வெளிப்படுத்தவும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த உலகிலுள்ள அனைத்து அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். அன்று மனித உரிமை மீறல்களுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகளையே இன்று நாங்கள் மேற்கொள்ளுகின்றோம்.

இன்று தமிழர்கள் கடத்தப்படுகின்றனர். நாளை சிங்களவர்கள்,வெளிநாட்டவர்கள்,ஊடகவியலாளர் என இந்தப் பட்டியல் நீடிப்புப்பெறும் அபாயம் உண்டு.

ஜனாதிபதியின் நெருங்கிய நண்பரான டிலான் அலஸ் என்பவரும் அச்சுறுத்தப்பட்டுள்ளார். நாட்டில் இடம்பெறுகின்ற கடத்தல், காணாமல் போதல், படுகொலைகள், சித்திரவதைகள் என்பவற்றுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அரசாங்கத் தரப்பினரே பொறுப்புக்கூற வேண்டும். மக்களை அடக்கி படுகொலை செய்து ஆட்சியை நடத்த முயற்சிக்கப்படுகின்றது எனத் தெரிவித்தார். (ந-5)

# மாகாண மட்டப் போட்டி யாழ்.மாணவர்கள் முன்னணி

மாகாண மட்டத்தில் திருகோணமலையில் நடைபெற்று வரும் தமிழ்த் தினப் போட்டியில், நேற்று ஆரம்பமான போட்டிகளில் யாழ்.மாவட்ட மாணவர்கள் ஏழு இடங்களில் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர்.

மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

முதற்பிரிவு– செல்வன் ஆனந்தராஜா ஹரிஷங்கர் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

**பேச்சு**

முதற்பிரிவு –செல்வி க.சரணிகா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

**நடனம் (தனி)**

இரண்டாம் பிரிவு – செல்வி பா.ஜஸ்திகா (யாழ்.இராமநாதன் கல்லூரி)

**நடனம்(தனி)**

மூன்றாம் பிரிவு– செல்வி ஜே.பிரியவதனி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி)

**நடனம் (தனி)**

ஐந்தாம் பிரிவு –செல்வி பா.அபிராமி (யாழ்.இராமநாதன் கல்லூரி)

**பாவோதல்**

ஐந்தாம் பிரிவு– செல்வி ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

**வில்லுப்பாட்டு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர் குழு. (ந)

# இராணுவத் தளபதி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவத் தளபதி சரத்பொன்சேகா நேற்று யாழ்.குடாநாட்டிற்கு திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

யாழ்.குடாநாட்டிற்கு விஜயத்தை மேற்கொண்ட இராணுவத் தளபதி குடாநாட்டிலுள்ள பாதுகாப்பு உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் குடாநாட்டு பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து ஆய்வு செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-3)

# வடக்கின் மாபெரும் போரில் மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 101–வது வடக்கின் மாபெரும் போரில் மத்திய கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கடந்த மூன்று தினங்களாக யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பி.நேசவர்மன் 36 ஓட்டங்களையும் எம்.ஹரிப்பிரவீன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பாக நவனீத் 19 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதல் வினோத்குமார் 79 ஓட்டங்களையும் ஜோன்ஸன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக ஜனுஷன் 39 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

முதல் இனிங்ஸில் 94 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 2–வது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ஹரிப்பிரவீன் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மத்தியகல்லூரி அணி சார்பாக நவனீத் 4 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு 32 ஓட்டங்கள் எடுக்க வேண்டுமென்ற நிலையில்தனது 2–வது இனிங்ஸை ஆரம்பித்த யாழ்.மத்திய கல்லூரி அணி விக்கெட் இழப்பின்றி 35 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் சுதர்ஷன் ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றார். இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக மத்திய கல்லூரி அணியின் வினோத்குமாரும் சிறந்த பந்து வீச்சாளராக சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் கே.ஜனுஷனும் சிறந்த களத் தடுப்பாளராக மத்திய கல்லூரியின் கே.செல்ரனும் சகலதுறை வீரராக மத்திய கல்லூரி அணியின் சுதர்ஷனும் போட்டியின் ஆட்ட நாயகனாக மத்திய கல்லூரி அணியின் என்.நவனீத்தும் தெரிவானார்கள். (ந-5)

# யாழ்.குடாநாட்டிற்கு தேவையான பொருள்களை எடுத்துச் செல்ல தனியார் முன்வந்துள்ளனர்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டில் யாழ்ப்பாண மக்களுக்குப் போதுமான அளவு அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் ஏனைய நுகர்வுப் பொருள்களையும் அனுப்பி வைப்பதற்கான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரட்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் நான்கு கப்பல்கள் மூலம் பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதில் ஒரு கப்பல் முழுமையாக தனியார் துறையில் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் திவாரட்ண குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த வாரம் கொழும்பில் இருந்து புறப்படும் இக் கப்பல்கள் மூலம் 3 ஆயிரத்து 200 மெற்றிக்தொன் அத்தியாவசிய நுகர்வுப் பொருள்கள்அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அடுத்து வரும்இரு வாரங்களுக்குள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படும் நான்கு கப்பல்களில் ஒரு கப்பல் எதிர்வரும் 30 ஆம் திகதி அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வருவதற்காக இந்தியா செல்லவிருப்பதாகவும் யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை அனுப்பிவைக்க தனியார் வியாபாரிகள் பலர் முன் வந்துள்ளனர்.

இதனால் யாழ்ப்பாணத்தில் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புக் கிடையாது என்றும் யாழ்ப்பாணத்திற்கான எரிபொருள் தேவையும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ந-3)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு 'விலங்கு விசர் நோய் தடுப்பூசி' நாளை திங்கட்கிழமையும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் ஏற்றப்படவுள்ளதாக கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் வை.நக்கீரன் அறிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை திருநெல்வேலி இந்து இளைஞர் வாலிபர் சங்கம், கொக்குவில் கிழக்கு கோணாவளை வீதி, கொக்குவில் பொற்பதிப் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களிலும்,

பிற்பகல் ஒரு மணிதொடக்கம் 2.30மணி வரையும் கொக்குவில் கனகதுர்க்கா கோவிலடி வளாகவீதி, நாமகள் பாடசாலையடி ஆகிய இடங்களிலும்,

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை பிரம்படி சன சமூகநிலையம் தலையாளி வைரவர் கோவிலடி, வளர்மதி சனசமூக நிலையம், கொக்குவில் மத்தி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் ஏற்றப்படவுள்ளன. (ந-3)

# முன்னாள் அமைச்சர் சூரியாராட்சி...

விசாரணையின் பின்னர் அவரைக் கைது செய்துள்ளனர்.

அரச வாகனம் ஒன்றைச் சட்ட விரோதமாகப்பாவிப்பதாக ஏற்கனவே அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என அவர் முன்னர் தெரிவித்திருந்தார்.

இரகசியப் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளிப்பதற்கு முன்னர் அவர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும் போது தமக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனம் தன்னால் சட்டரீதியாக மீளக் கையளிக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கைது நடவடிக்கை கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவிலேயே இடம்பெற்றுள்ளது எனத்தெரியவருகின்றது. மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு மிகவும் நெருக்கடிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி மீது கடும் கோபத்திலுள்ள ராஜபக்ஷ சகோதரர்கள், இவர்களைக் கைது செய்து சிறையில் போடத் தீர்மானித்துள்ளதாகவும் இதன் முதற்செயற்பாடே சூரியாராட்சியின் கைது என்றும் இவரைத் தொடர்ந்து மங்கள சமரவீரவும் விரைவில் கைது செய்யப்படலாம் என நம்பப்படுகின்றது. (ந-3,5)

**Médecins Sans Frontiéres (MSF)-France**

**MSF** is an International independent humanitarian medical aid agency committed two objectives: providing medical aid wherever needed, regardless of race, religion, politics or sex and raising awareness of the plight of the people we help.

**VACANCY**

**POSITION:Medical Translator**

We are looking a skilled,energetic and dynamic person to suit the above position to our office in Point Pedro.The Translator will work with the medical team in the project of hospitals.

Skills required:

- Excellent communication skill in English.
- Good interpersonal skill.
- Previous working experience in Medical activities would be an advantageous.

Please forward your **CV** along with contact phone numbers to the following address before **24th March 2007.**

**Field Coordinator**
**Médecins Sans Frontiéres (MSF)-France**
Manthikai
Point Pedro. (827)

# மக்கள் எதிர்பார்க்கும்...

துள்ளார்.

நாட்டில் தற்போது திருட்டுக்களே நடைபெறுகின்றன. மோசடிகளும் வன்முறைகளும் தலைவிரித்தாடுகின்றன. இதனைத் தடுப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

தாம் ஆரம்பித்துள்ள பயணத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை என்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ந-3)

# அமெரிக்கப் படையை...

வரவழைக்கும் முன்னாயத்த நடவடிக்கைகள் எனக் கூறும் அரசியல் ராஜதந்திரிகள், இதன் மற்றுமோர் நடவடிக்கையாகவே இலங்கையின் வெளியுறவு அமைச்சர் றோகித போகொல்லாகம அமெரிக்காவுக்குச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை அமெரிக்காவுக்கான தெற்காசியா மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி ராஜாங்கச் செயலாளர் ஷ்ரீபன் மாஜனை அண்மையில் சந்தித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதர ருமான கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு அமெரிக்கா உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

# கொழும்பு ஆட்கடத்தல்...

கட்சியின் உறுப்பினர்களையா நாங்கள் கடத்துகின்றோம். மக்களைத்தானே கடத்துகின்றோம் எனக் கூறியிருந்தார்.

இதன் மூலம் கடத்தல் சம்பவங்களுடன் அவருக்குத் தொடர்புள்ளமை உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸடன் பெர்னாண்டோ மற்றும் லக்ஷ்மன் கிரியல்ல ஆகியோர் தெரிவித்தனர்.

அரசியல்வாதிகளைக் கடத்தாமல் பொது மக்களைக் கடத்துவது சரியானதா என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன், அதிகரித்திருக்கும் ஆட்கடத்தல்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டுமென அவர்கள் கூறியுள்ளனர். (ந-5) (விரிவான செய்தி 07 ஆம் பக்கத்தில்)

# ம.உ.ஆ...

தஞ்சமடைந்துள்ளார்.

தஞ்சம் இடைந்த பிரஸ்தாப இளைஞன் நீதிமன்றின் உதவியுடன் பாதுகாப்பாக யாழ். சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-3)

# நாகர்...

ரி–56 ரக துப்பாக்கிகள்–2, ரவைக் கூடுகள்–4, ரவைகள்–100 ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இத் தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளதாக கொழும்பில் உள்ள படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

# இலங்கை...

தீவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 83 இலங்கை அகதிகளும் நேற்று நவ்று தீவிலுள்ள தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சட்ட உதவி கோரி சட்ட ஆலோசர்களை நாடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று மெல்பேர்னில் உள்ள தமிழ்ச் சங்கப் பிரதிநிதி ஒருவர் கவலை வெளியிட்டிருக்கின்றார். (ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.